සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல DDD/HO/MF/05/01/சுற்றறிக்கை<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ...........................................<br>Your No | දිනය<br>திகதி 2017.07.27<br>Date |

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சுற்றுநிருப இலக்கம் 2017/10**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி / வங்கிச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் கடன்களுக்கான வருடாந்த வட்டி வீதத்தை திருத்தம் செய்தல்</u>**

01. சமுர்த்தி வங்கிகள் / வங்கிச் சங்கங்களின் மூலம் தற்போது வழங்கப்படுகின்ற சகல கடன் வேலைத்திட்டங்களுக்குமான வருடாந்த கடன் வட்டி வீதத்தினை 2017.08.01 ஆம் திகதியில் இருந்து அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சபை அனுமதி வழங்கியுள்ளது.

02. சமுர்த்தி வங்கிகளின் மூலம் செயற்படுத்தப்படும் குடும்ப அலகின் உட்கட்டுமான வசதிகளுக்கான கடன்கள் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் “திவிநெகும இசுறு” கடன்கள் என்பவற்றுக்கான வருடாந்த வட்டி வீதம் 2017.08.01 ஆம் திகதியில் இருந்து 14% மாக உயர்வடைகின்றது.

03. மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள கடன்கள் தவிர சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் மூலம் வழங்கப்படும் ஏனைய கடன்களுக்கான வட்டி வீதமும் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2017.08.01 திகதியில் இருந்து வழங்கப்படும் ஏனைய புதிய கடன்களுக்கான வருடாந்த வட்டி வீதம் 12% மாக திருத்தம் செய்யப்படுகின்றது.

04. 2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட தற்போது அறவிட வேண்டியுள்ள (காலம் கடந்த கடன்கள் உட்பட) கடன் தொகைக்கும் மற்றும் தற்போது நிறுத்தப்பட்டுள்ள அல்லது கைவிடப்பட்டுள்ள கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு தற்போது நிலுவையாகவுள்ள கடன்களுக்கும் அவை ஒப்பந்தம் செய்யப்பட்ட வட்டி வீதத்தில் எவ்வித மாற்றமும் இன்றி தொடராக செயற்படுத்தப்படல் வேண்டும்.

05. இச் சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் வருடாந்த வட்டி வீதத்தினை திருத்தம் செய்வதற்கு முன்னர் கட்டுப்பாட்டுச் சபை / நிறைவேற்றுச் சபையில் அனுமதிபெறல் வேண்டும். மேலும் 2017.08.01 திகதிக்கு பின்னர் வழங்கப்படும் அனைத்துக் கடன்களுக்கும் புதிய வட்டிவீதம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

| | | | | |
|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General<br>Tel- 011-2873802/2872202<br>Fax - 011-2889002<br>E-mail- dg@divineguma.gov.lk | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource)<br>011-2873799<br>011-2873996<br>diradmin@divineguma.gov.lk<br>Hot Line : 0112-889007 | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant<br>011-2869742<br>011-2869742<br>finance@divineguma.gov.lk | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය )<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance)<br>011-2889003<br>011-2887469<br>Hot Line:0112-885582 | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office<br>011-2887280<br>Hot Line: 011- 2887722 |

06. வாழ்வாதார அபிவிருத்தி சுழற்சி நிதியக் கடன் மற்றும் சுயசக்தி கடன் திட்டங்களுக்கு தற்போது செயற்படுத்தப்படும் வட்டி வீதத்தில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை.

07. சமுர்த்தி வங்கி / வங்கிச் சங்கத்தின் ஊடாக வழங்கப்படும் கடன் திட்டத்துக்கு நடைமுறையில் உள்ள ஏனைய ஆலோசனைகளில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அவ்வாறே செயற்படுத்தப்படல் வேண்டும்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்**

| | |
|---|---|
| 1. செயலாளர் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு | - தகவலுக்காக |
| 2. சகல மாவட்ட செயலாளர்களுக்கும் | - தகவலுக்காக |
| 3. சகல மாவட்ட பணிப்பாளர்கள் | - உ.ந. பொருட்டு |
| 4. சகல பிரதேச செயலாளர்களுக்கும் | - உ.ந. பொருட்டு |
| 5. பிரதம உள்ளக கணக்காளர்கள் | - தகவலுக்காக |

Translated by:- I. aliyar